### “புத்தகங்கள் வழங்கிட வேண்டும்!” என்று கோரிக்கை வைத்ததற்கிணங்க

# கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் 6,500 புத்தகங்களை வழங்கினார்!

## கல்லூரிகள் – கழக நூலகங்களுக்கு வழங்கப்பட்டது!



















**சென்னை, செப்.7-**

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தவர்கள் அளித்த புத்தகங்களை, தங்களுக்கு வழங்கிட வேண்டுமென கோரிக்கை வைத்ததன் அடிப்படையில், மதுரை, கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரிக்கு 1,000 புத்தகங்கள் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வீரமகேந்திரகோட்டை புரட்சியாளர் அம்பேத்கர் படிப்பகத்திற்கு 1,000 புத்தகங்கள் கோவை மாவட்டம், அன்னூர் ஒன்றியம், தந்தை பெரியார் திராவிடர் கழக நூலகத்திற்கு 500 புத்தகங்கள் தருமபுரி மாவட்ட வழக்கறிஞர் அணிக்கு 2,000 புத்தகங்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியக் கழக நூலகத்திற்கு 1,000 புத்தகங்கள் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மேல்வசலை கிராமம் முத்தமிழறிஞர் கலைஞர் நூலகத்திற்கு 1,000 புத்தகங்கள் என மொத்தம் 6,500 புத்தகங்களை நேற்று (05.09.2026) சென்னை அண்ணா அறிவாலயத்தில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்தவர்கள், அவருக்கு அளித்த புத்தகங்களை, தங்கள் கல்லூரி மற்றும் பகுதிகளில் உள்ள நூலகங்களுக்கு வழங்கிடுமாறு வைத்த கோரிக்கையினை ஏற்றுக் கொண்ட கழகத் தலைவர் அவர்கள்;

மதுரை, கருமாத்தூர் அருள் ஆனந்தர் கல்லூரிக்கு 1,000 புத்தகங்கள் தூத்துக்குடி மாவட்டம், திருச்செந்தூர் வீரமகேந்திரகோட்டை புரட்சியாளர் அம்பேத்கர் படிப்பகத்திற்கு 1,000 புத்தகங்கள் கோவை மாவட்டம், அன்னூர் ஒன்றியம், தந்தை பெரியார் திராவிடர் கழக நூலகத்திற்கு 500 புத்தகங்கள் தருமபுரி மாவட்ட வழக்கறிஞர் அணிக்கு 2,000 புத்தகங்கள் திருப்பத்தூர் மாவட்டம், ஜோலார்பேட்டை கிழக்கு ஒன்றியக் கழக நூலகத்திற்கு 1,000 புத்தகங்கள் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் மேல்வசலை கிராமம் முத்தமிழறி ஞர் கலைஞர் நூலகத்திற்கு 1,000 புத்தகங்கள் என மொத்தம் 6,500 புத்தகங்களை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், நேற்று (05.09.2026), காலை, சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில், அந்தந்த நூலக நிர்வாகிகளிடம் வழங்கினார்.

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தனக்கு வரப்பெற்ற புத்தகங்களில் இதுவரை 6,50,000 (6 இலட்சத்து 50 ஆயிரம்) புத்தகங்களை பல்வேறு நூலகங்களுக்கு வழங்கியுள்ளார்.

அதுபோது கழகப் பொதுச்செயலாளர் துரைமுருகன், பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., துணைப் பொதுச்செயலாளர்கள் க.பொன்முடி, ஆ.இராசா, எம்.பி., அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, செய்தித் தொடர்புத் தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உடனிருந்தனர்.